தேதி.24.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 74/2022 திரு.சென்னிமலைக்கவுண்டர், த/பெ.பச்சாக்கவுண்டர் பி.சா.2

<u>பி.சா.2: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் 1ம் பிரதிவாதி சொல்லி தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதியின் தாய்மாமன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடமிருந்து வாதி ஏற்கனவே ஒரு பூமி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் முதல் மனைவி காளியம்மாள் இறந்ததற்கு பின்னிட்டு வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் வாதியின் உடன்பிறந்த சகோதரர்கள், காளியம்மாளின் சொத்தை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். காளியம்மாளின் சொத்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரின் உடன்பிறந்த சகோதரர்களுக்கு தான் பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி பாகம் பிரித்த பின்னர் அவரவர் பூமியை அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட்டில் எவ்வளவு பாகம் எழுதிவைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயில் தான் எழுதிவைத்தார். 1ம் பிரதிவாதி, வாதி ஆகியோர்கள் பேசிக்கொள்வது இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, வாதி மற்றும் மற்றவர்கள் மீது கோபி வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகாரை கோட்டாட்சியர் விசாரித்து 1ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை மூலம் சொத்து உள்ளதாக விசாரணையை முடித்து வைத்தார்கள் என்றால் தெரியாது.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் வழக்கறிஞர் தான் சொல்லிக்கொடுத்தார். நான் 1ம் பிரதிவாதியின் தாய்மாமன் என்ற முறையில் இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.